# பொருளியல்

க.பொ.த உயர்தரம்

# கருத்தரங்கு

தொடர் - 02

2016

தேர்ச்சி - 02

## சந்தைப் பொருளாதாரம்

சிறு குறிப்புக்கள்

மாதிரி வினா விடைகள்

புள்ளித்திட்ட விளக்கம்

பல்தேர்வு வினாக்கள்

திரு. S.ஜெயகுமார்

(B.A(Hons) ECO SPI, M.A.in Eco, P.G.D.E)

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

# 1. கேள்விக் கோட்பாடு

## தேவை

மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான அதிகுறைந்த வசதிகள் தேவை எனப்படும்.

Eg : உணவு, உடை, உறையுள்

## பயன்படு கேள்வி (செயற்றிறனான கேள்வி)

பொருளொன்றின் கொள்வனவு செய்வதற்கான விருப்பம், கொள்வனவு சக்தி, பொருளைக் கொள்வனவு செய்யத் திட்டமிடல் என்பவற்றின் உள்ளடங்கிய கேள்வியை பயன்படு கேள்வி என்பர்.

## பண்டமொன்றின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்

- குறித்த பண்டத்தின் விலை $(P_x)$
- தொடர்புடைய பண்டத்தின் விலை $(P_1 - P_n)$

  (பிரதியீட்டுப் பொருளின் விலை, நிரப்புப் பொருளின் விலை)
- நுகர்வோனின் வருமானம் (Y)
- நுகர்வோன் சுவை (T)
- எதிர்கால விலை தொடர்பான எதிர்பார்க்கை (E)
- நுகர்வோர் எண்ணிக்கை (N)
- $Qd_x = f(P_x, (P_1 - P_n), Y, T, E, N)$

## கேள்வி விதி

- மற்றவைகள் மாறாதபோது, பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது, கேள்வித்தொகை குறைவதும், மாறாக விலை வீழ்ச்சியடையும்போது கேள்வித் தொகை அதிகரிப்பதும், கேள்வி விதி எனப்படும்.
- இங்கு பண்டத்தின் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்.

## வருமான விளைவு

மாற்றவைகள் மாறாத நிலையில் சாதாரண பண்டமொன்றின் விலையில் மாற்றம் ஏற்படுகின்ற போது நுகர்வோனின் மெய்வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் அப்பண்டத்தின் கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றம் வருமான விளைவு எனப்படும்.

- விலை வீழ்ச்சியடைதல் → மெய்வருமானம் அதிகரித்தல் → கேள்வித்தொகை அதிகரித்தல்
- விலை அதிகரித்தல் → மெய்வருமானம் குறைதல் → கேள்வித்தொகை குறைதல்

## பிரதியீட்டு விளைவு / பதிலீட்டு விளைவு

மற்றவைகள் மாறாதபோது பண்டமொன்றின் விலைமாற்றமடையும் போது சார்பு விலையில் ஏற்படும் மாற்றத்தினால் பதிலீட்டுப் பண்டமொன்றின் கேள்வியில் மாற்றம் ஏற்பட்டு குறித்த பண்டமொன்றின் கேள்வித்தொகையில் ஏற்படுகின்ற மாற்றம் பிரதியீட்டு விளைவு எனப்படும்.

| X பண்டம் (குறித்த பண்டம்) | Y பண்டம் (பதிலீட்டுப் பண்டம்) | சார்புவிலை | Yபண்டத்தின் கேள்வி | Xபண்டத்தின் கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| விலை அதிகரிக்கும் | விலை மாறாது | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறையும் |
| விலை குறையும். | விலை மாறாது. | குறையும். | குறையும். | அதிகரிக்கும் |

**கேள்வி அதிகரிப்பு**

- பதிலீட்டுப் பொருளின் விலை அதிகரிப்பு
- நிரப்புப் பொருளின் விலை வீழ்ச்சியடைதல்
- நுகர்வோன் வருமானம் அதிகரித்தல்
- நுகர்வோன் சுவை அதிகரித்தல்
- எதிர்காலத்தில் விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள்
- நுகர்வோன் எண்ணிக்கை அதிகரித்தல்.

**கேள்வி குறைதல்**

- பதிலீட்டுப் பொருளின் விலை வீழ்ச்சி
- நிரப்புப் பொருளின் விலை அதிகரித்தல்
- நுகர்வோனின் வருமானம் வீழ்ச்சியடைதல்.
- நுகர்வோன் சுவை குறைதல்
- எதிர்காலத்தில் விலை குறையும் என்ற எதிர்பார்ப்புக்கள்
- நுகர்வோன் எண்ணிக்கை குறைதல்.

### சாதாரண பண்டம்

- நுகர்வோனின் வருமானத்-திற்கும் கேள்விக்குமிடையில் நேர்த்தொடர்பு காணப்படும்.
- விலைசார் கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும், வருமான நெகிழ்ச்சி நேர்க்கணியமாகவும் காணப்படும்.


### இழிவுப் பண்டம்


- நுகர்வோனின் வருமானத்-திற்கும் கேள்விக்குமிடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்.
- விலைசார் கேள்வி நெகிழ்ச்சி, வருமான நெகிழ்ச்சி இரண்டும் எதிர்க்கணியமாக இருக்கும்.

### கி.்.ன் பண்டம்

- இழிவுப்பண்டத்தின் ஒரு வகையாக கி.்.ன் பண்டம் உள்ளது.
- விலைக்கும், கேள்வித்தொகைக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படும்.
- கேள்வியின் விலை நெகிழ்ச்சி நேரானதாகவும், வருமான நெகிழ்ச்சி எதிர்க்கணியமாகவும் காணப்படும்.

X உம் Y உம் பதிலீட்டுப் பண்டம்





Y பண்டத்தின் விலைக்கும் X பண்டத்தின் கேள்விக்கும் இடையில் நேர்த்தொடர்பு காணப்படும்.

**நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்துவை**

**முழுப்படிக்கட்டையும் நீ பார்க்கவேண்டிய அவசியமில்லை**

**முதல் படியில் ஏறு**

X உம் Yஉம் இணைப்புப்பண்டம்




Y பண்டத்தின் விலைக்கும் X பண்டத்தின் கேள்விக்குமிடையில் எதிர்த்தொடர்பு காணப்படும்.

தனிநபர் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்

$Qd=f(P_x,(P_1-P_n), Y, T, E)$

சந்தைக் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகள்

$Qd_x=f(P_x,(P--P_n),Y, T, E, N)$

## 2. நிரம்பல் கோட்பாடு

**பண்டமொன்றில் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள்**


- குறித்த பொருளின் விலை
- ஏனைய பொருட்களின் விலை
- உற்பத்திச் செலவுகள்/ உள்ளீடுகளின் விலை
- தொழிநுட்பம்
- காலநிலை
- அரச நடவடிக்கைகள் (மறைமுக வரிகளும் மானியங்களும்)
- எதிர்பார்க்கைகள்
- நிரம்பலாளர்களின் எண்ணிக்கை

பண்டமொன்றின் நிரம்பல் கோடு கீழிருந்து மேல் நோக்கி சரிந்து செல்வதற்குரிய காரணங்கள்

- நிரம்பலாளர் பெறும் இலாபம்.
- அதிகரிக்கும் எல்லைச் செலவு / எல்லை அமையச் செலவு.

| நிரம்பல் அதிகரிப்பு | நிரம்பல் குறைதல் |
|---|---|
| 1. தொடர்புடைய பதிலீட்டு உற்பத்திகளின் விலை குறைதல். | 1. தொடர்புடைய பதிலீட்டு உற்பத்திகளின் விலை அதிகரித்தல். |
| 2. உற்பத்திச் செலவு குறைதல். | 2. உற்பத்திச் செலவு அதிகரித்தல். |
| 3. தொழினுட்ப முன்னேற்றம். | 3. தொழினுட்ப பின்னடைவு. |
| 4. அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குதல். | 4. அரசாங்கம் உற்பத்தியாளர் மீது வரிவிதித்தல். |
| 5. சந்தையிலுள்ள நிரம்பலாளர் தொகை அதிகரித்தல். | 5. சந்தையிலுள்ள நிரம்பலாளர் தொகை குறைதல். |


**நுகர்வோன் மிகை**




$$Cs = \frac{MDp - Pm}{2} \times Qm$$

- Cs = நுகர்வோன் மிகை
- MDp = ஆகக் கூடிய கேள்வி விலை
- Pm = சந்தை விலை
- Qm = சந்தைத் தொகை

**உற்பத்தியாளன் மிகை**




$$Ps = \frac{Pm - MSp}{2} \times Qm$$

- Ps = உற்பத்தியாளன் மிகை
- MSp = ஆகக் குறைந்த நிரம்பல் விலை
- Pm = சந்தை விலை
- Qm = சந்தைத் தொகை

சிறிய தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால்

பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது!

Q1. Qd = 100 - 5P எனும் கேள்விச்சார்பு தரப்பட்டுள்ளது

1. ரு 10 இல் நுகர்வோர் மிகை எவ்வளவு?

$CS = \frac{MPP - PM}{2} \times Qm$ → $\frac{10}{2} \times 50$

$= \frac{20-10}{2} \times 50$ → $= 250/-$

2. பண்டத்தின் விலை ரு 10 இலிருந்து ரு 8 ஆக வீழ்ச்சியடைவதாகக் கருதுக. விலை வீழ்ச்சியின் பின்னர் புதிய நுகர்வோருக்கு கிடைத்த மிகுதி எவ்வளவு?

$\frac{20-8}{2} \times 50$ → $6 \times 50$

$= \frac{12}{2} \times 50$ → $= 200/-$

Q2. Qs=-100+10P எனும் நிரம்பல் சார்பு தரப்பட்டுள்ளது.

1. ரு 15 இல் உற்பத்தியாளன் மிகை எவ்வளவு?

$PS = \frac{PM - MSP}{2} \times Qm$ → $= \frac{5}{2} \times 50$

$PS = \frac{15-10}{2} \times 50$ → $= 125/-$

2. பண்டத்தின் விலை ரு 15 இலிருந்து ரு 20 ஆக அதிகரிப்பதாக கருதுக. விலை அதிகரித்த பின்னர் புதிய விற்பனையாளருக்கு கிடைத்த மிகை எவ்வளவு?

$PS = \frac{20-10}{2} \times 50$ → $250/-$

$= 5 \times 50$

ஒரே குறிக்கோள் எல்லை அற்ற ஊக்கம்

தளர்வில்லாத நெஞ்சுறுதி சளைக்காத உழைப்பு

நேர்மையான பாதை – வெற்றி

கிடைக்காமலா போய்விடும்?

# 3. நெகிழ்ச்சிக் கோட்பாடு

நெகிழ்ச்சி

விலைசார் கேள்வி நெகிழ்ச்சி = $\frac{\text{கேள்வித் தொகை மாற்றவீதம்}}{\text{விலை மாற்ற வீதம்}}$

$$PEd = \frac{\Delta Qd}{\Delta P} \times \frac{P}{Qd}$$

$$PEd = b \times \frac{P}{Qd}$$

வருமான நெகிழ்ச்சி = $\frac{\text{கேள்வி மாற்றவீதம்}}{\text{வருமான மாற்ற வீதம்}}$

$$EI = \frac{\Delta Q}{\Delta I} \times \frac{I}{Q}$$

குறுக்கு நெகிழ்ச்சி = $\frac{\text{X பண்டத்தின் கேள்வி மாற்றவீதம்}}{\text{Y பண்டத்தின் விலை மாற்ற வீதம்}}$

$$CE = \frac{\Delta Qx}{\Delta Py} \times \frac{Py}{Qx}$$


விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி = $\frac{\text{நிரம்பல் தொகை மாற்றவீதம்}}{\text{விலை மாற்ற வீதம்}}$

$$PEs = \frac{\Delta Qs}{\Delta P} \times \frac{P}{Qs}$$

$$= b \times \frac{P}{Qs}$$


**நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னிலையிலும்**
**எப்போதுமே மண்டியிடுவதில்லை**

# விலைசார் கேள்வி நெகிழ்ச்சி



**பொருளின் விலைக்கும் நுகர்வோன் செலவுக்கும் இடையிலான தொடர்பு**

| கேள்வி நெகிழ்ச்சி | | விலைமாற்றம் | பண்டத்தின் மீதான மொத்தச் செலவு / விற்பனை வருமானம் |
|---|---|---|---|
| (1) | ஒன்றுக்குக் கூட PEd > 1 | அதிகரித்தல்<br>குறைதல் | குறையும்<br>அதிகரிக்கும் |
| (2) | ஒன்றுக்குக்குறைவு PEd < 1 | அதிகரித்தல்<br>குறைதல் | அதிகரித்தல்<br>குறைதல் |
| (3) | அலகு PEd = 1 | அதிகரித்தல்<br>குறைதல் | மாறாது<br>மாறாது |
| (4) | பூச்சியம் PEd = 0 | அதிகரிக்கும்<br>குறையும் | அதிகரிக்கும்<br>குறையும் |




Qd=200-5p என்ற கேள்விச்சார்பு தரப்பட்டுள்ளது.

1. எவ்விலையில் கேள்வி நெகிழ்ச்சி முடிவிலியாக காணப்படும்?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

2. எவ்விலையில் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனாக காணப்படும்?

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

**கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள்**


- பதிலீடுகளின் கிடைப்பனவுத் தன்மை
- பண்டத்தின் தன்மை
- பண்டத்தின் பாவனைக்காலம்
- வருமானத்தில் பண்டத்தின்மீது செலவிடும் வீதம்
- பண்டத்தின் வரையறைத்தன்மை

| வருமான நெகிழ்ச்சி | பண்டம் |
|---|---|
| நேர்கணியம் | சாதாரண பண்டம் |
| நேரானது ஒன்றைவிடப் பெரிது [EI > 1] | ஆடம்பரப் பண்டம் |
| நேரானது ஒன்றைவிடச் சிறிது [EI < 1] | அத்தியாவசியப் பண்டம் |
| எதிர்க்கணியம் | இழிவுப் பண்டம் |

| குறுக்கு நெகிழ்ச்சி | பண்டம் (தொடர்புடையது) |
|---|---|
| நேரானது $^{+}$CE | பிரதியீட்டுப் பண்டம் |
| நேரானது ஒன்றைவிடப் பெரிது [EI > 1] | நெருங்கிய பிரதியீட்டுப் பண்டம் |
| நேரானது ஒன்றைவிடச் சிறிது [EI < 1] | நெருக்கமற்ற பிரதியீட்டுப் பண்டம் |
| எதிரானது $^{-}$CE | நிரப்புப் பண்டம்/இணைப்புப் பண்டம் |

**நிரம்பல் நெகிழ்ச்சி**


**ஒன்றுக்குக்கூடிய நிரம்பல் நெகிழ்ச்சி PEs > 1 / நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளது.**




$$Qs = -100 + 10P$$

| P | Qs | PES |
|---|---|---|
| 20 | 100 | 2 |
| 30 | 200 | 1.5 |


ஒன்றுக்குக்குறைந்த நிரம்பல் நெகிழ்ச்சி PEs < 1 / நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளது.




$Qs = 50 + 5P$

| P | Qs | PES |
|---|---|---|
| 10 | ...... | ...... |
| 20 | ...... | ...... |

ஒன்றுக்குச் சமனான நிரம்பல் நெகிழ்ச்சி PEs = 1 / அலகு நிரம்பல் நெகிழ்ச்சி




$Qs = 10P$


| P | Qs | PES |
|---|---|---|
| 10 | ...... | ...... |
| 20 | ...... | ...... |


நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள்

1. நிரம்பல் (உற்பத்தி) செய்வதற்கு எடுக்கும் காலம்.
2. பண்டத்தின் கையிருப்பு மட்டம்.
3. இருப்பில் வைக்கக்கூடிய காலப்பகுதி.
4. காரணிகளின் அசைவுத்தன்மை
5. பண்டத்தின் தன்மை

சிந்திக்காதவன் முட்டாள்
சிந்திக்கத் துணியாதவன் கோழை
சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்

# 4. சந்தைச் சமநிலை




## பண்புகள்

1. கேள்வித்தொகை = நிரம்பல் தொகை (Qd = Qs)
2. மிகைக் கேள்வி, மிகை நிரம்பல் பூச்சியம் (Ed = 0, Es = 0)
3. கேள்வி விலை = நிரம்பல் விலை (Dp = Sp)
4. மிகைக் கேள்விவிலை பூச்சியம்/மிகை நிரம்பல் விலை பூச்சியம் (Edp = 0, Esp = 0)
5. சந்தையின் சக்திகளான கேள்வியும் நிரம்பலும் நிலையானது.
6. நுகர்வோரின் நோக்கமும் உற்பத்தியாளரின் நோக்கமும் நிறைவேற்றப்படும்.

## வினா

**X பண்டத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தகவல்கள் வருமாறு :**

| விலை (P) | கேள்வித்தொகை (Qd) | நிரம்பல் தொகை (Qs) |
|---|---|---|
| 50 | 1000 | 500 |
| 60 | 500 | 1000 |

**i) x பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளை உருவாக்குக.**

$\frac{\Delta Qd}{\Delta P} = \frac{500}{10} = 50$

Qd = a + bP
1000 = a + 50×50
3500 = a
Qd = 3500 − 50P

$b = \frac{\Delta Q}{\Delta P} = \frac{500}{10} = 50$

QS = a + bP
500 = a + 50×50
−2000 = a
QS = −2000 + 50P

சமநிலை விலை = 55 /-
சமநிலை தொகை = 750 அலகு

ii) x பண்டத்தின் சமநிலை, விலை, தொகையைக் காண்க.

Qd = Qs  Qd = 3500 − 50P

3500 − 50P = −2000 + 50P  = 3500 − 50 × 55

5500 = 100P  = 3500 − 2750

55 = P  Qd = 750

iii) சமநிலை விலையில் கேள்வி நெகிழ்ச்சியைக் கணிக்குக.

b = 50

$50 \times \frac{55}{750} = -3.66$

iv) ஆகக்கூடிய கேள்விவிலை, ஆகக்குறைந்த நிரம்பல் விலையை கணிக்குக.

v) சமநிலையில் உற்பத்தியாளர் மிகையைக் காண்க?

vi) சமநிலைவிலையில் நுகர்வோர் மிகையைக் காண்க.

## 5. மறைமுக வரிவிதிப்பும் சந்தைச் சமநிலையும்

வரிக்கு முன்னுள்ள நிரம்பல் சார்பு $Qs = a + bp$,


வரிக்குப் பின்னுள்ள நிரம்பல் சார்பு $Qs = a + b(P - T)$

T = அலகு வரி

வெற்றி பெறுவது எப்படி என்று யோசிப்பதை விட

தோல்வி அடைந்தது எப்படி என்று யோசித்துப்பார்

நீ கண்டிப்பாக வெற்றி பெறுவாய்




- வரிக்கு முன் சமநிலை விலை $P_1$ ஆகும்.
- அலகுக்குரிய வரி $P_2 - P_3$ ஆகும்.
- வரிக்குப்பின் சமநிலை விலை $P_2$ ஆகும்.
- வரிக்கு முன் சமநிலை தொகை $Q_1$ ஆகும்.
- வரிக்கு பின் சமநிலைத் தொகை $Q_2$ ஆகும்.
- வரிக்குப்பின் நுகர்வோர் செலுத்தும் விலை $P_2$ ஆகும்.
- வரிக்குப்பின் விற்பனையாளர் பெறும் விலை $P_3$ ஆகும்.
- வரிக்கு முன் நுகர்வோர் மிகை A+B+C+D பரப்பாகும்.
- வரிக்கு பின் நுகர்வோர் மிகை A பரப்பாகும்.
- வரிக்கு முன் உற்பத்தியாளன் மிகை G+F+E+H+I பரப்பாகும்.
- வரிக்கு பின் உற்பத்தியாளன் மிகை H+I பரப்பாகும்.
- அரசுக்குக் கிடைத்த வரிவருமானம் B+C+F+G பரப்பாகும்.
- வரிக்கு முன் மொத்த மிகை A+B+C+D+G+F+E+H+I பரப்பாகும்.
- வரிக்குப்பின் மொத்த மிகை A+H+G+B+C+G+F பரப்பாகும்.
- வரிவிதிப்பினால் ஏற்பட்ட மீளமுடியாத இழப்பு D+E ஆகும்.
- நுகர்வோருக்குரிய மொத்த வரிச்சுமை B+C ஆகும்.
- விற்பனையாளருக்குரிய மொத்த வரிச்சுமை G+F ஆகும்.

வினா

Y பண்டத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தகவல்கள் வருமாறு :

| விலை | கேள்வித்தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 50 | 1000 | 200 |
| 100 | 500 | 700 |

i) கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளை உருவாக்கி சமநிலை விலை, தொகையைக் காண்க.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

ii) அரசாங்கம் Y பண்டத்தின் விற்பனையாளர்மீது அலகொன்றுக்கு ரூ. 10 வரியினை விதிப்பதாகக் கருதி இம் மாற்றத்தை வரைபில் காட்டி புதிய சமநிலை விலை, தொகையைக் காண்க.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

iii) அ) நுகர்வோர், ஆ) விற்பனையாளரின் மொத்த வரிச்சுமை யாது?

..................................................................................................................

iv) அரசுக்குக் கிடைத்த மொத்த வரிவருமானம் எவ்வளவு?

..................................................................................................................

..................................................................................................................

v) அ) வரிக்கு முன்பும், ஆ) வரிக்குப் பின்பும் நுகர்வோர் மிகையைக் காண்க.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

vi) அ) வரிக்கு முன்பும், ஆ) வரிக்குப் பின்பும் உற்பத்தியாளர் மிகையைக் காண்க.

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................


vii) வரியினால் ஏற்பட்ட மீள முடியாத இழப்பு (Dead weight Loss) எவ்வளவு?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

| | கேள்வி நெகிழ்ச்சி | நிரம்பல் நெகிழ்ச்சி | வரியினால் சந்தை விலையில் ஏற்படும் மாற்றம் | நுகர்வோரின் வரிச்சுமை | விற்பனை-யாளரின் வரிச்சுமை |
|---|---|---|---|---|---|
| 1) | ஒன்றுக்குக்கூட | ஒன்றுக்குக்குறைவு | சிறியளவு | குறைவு | அதிகம் |
| 2) | ஒன்றுக்குக்குறைவு | ஒன்றுக்குக்கூட | பெரியளவு | அதிகம் | குறைவு |
| 3) | ஒன்றுக்குச் சமன் | ஒன்றுக்குச் சமன் | அலகுவரியின் அரைவாசி | சமன் | சமன் |
| 4) | பூச்சியம் | முடிவிலி | வரியின் முழுவதும் | முழுவதும் | இல்லை |
| 5) | முடிவிலி | பூச்சியம் | மாற்றமில்லை | இல்லை | முழுவதும் |





## 6. மானியமும் சந்தைச் சமநிலையும்

மானியத்திற்கு முன்னுள்ள நிரம்பல் சார்பு $Qs = a + bp$

மானியத்திற்கு பின்னுள்ள நிரம்பல் சார்பு $Qs = a + b\,(P+R)$

$R =$ அலகு மானியம்




| | விடயம் | மானியத்திற்கு முன் | மானியத்திற்குப் பின் |
|---|---|---|---|
| 1. | சம நிலை விலை | P1 | P2 |
| 2. | சம நிலைத் தொகை | Q1 | Q2 |
| 3. | நுகர்வோன் செலுத்தும் விலை | P1 | P2 |
| 4. | விற்பனையாளனுக்குக் கிடைக்கும் விலை | P1 | P3 |
| 5. | நுகர்வோன் மிகை | A+B | A+B+H+G+F |
| 6. | உற்பத்தியாளன் மிகை | I+H | I+H+B+C |
| 7. | அரசின் செலவு | - | B+C+D+E+F+G+H |
| 8. | மொத்த மிகை | A+B+I+H | A+B+H+G+F+I+H+B+C -(B+C+D+E+F+G+H) |
| 9. | தேறிய சமூக இழப்பு | - | D+E |
| 10. | நுகர்வோனுக்குரிய மொத்த மானிய நன்மை | - | H+G+F+E |
| 11. | உற்பத்தியாளருக்குரிய மொத்த மானியத் நன்மை | - | B+C+D |

**வினா**

| விலை | கேள்வித்தொகை | நிரம்பல் தொகை |
|---|---|---|
| 20 | 200 | 100 |
| 30 | 100 | 200 |

i) **கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளை உருவாக்குக.**

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

ii) சமநிலைவிலை, தொகையைக் காண்க?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

iii) அரசாங்கம் உற்பத்தியாளர்களுக்கு அலகொன்றுக்கு ரூ 5 மானியத்தினை வழங்குவதாக கருதி, மானியத்திற்கு பின்னர் நுகர்வோர் செலுத்தும் விலையினையும், விற்பனையாளர் பெறும் விலையையும் காண்க.

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

iv) மானியத்தினால் நுகர்வோர், விற்பனையாளர் பெறும் மொத்த நன்மை எவ்வளவு?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

v) மானியத்தினால் அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு?

.....................................................................................................

.....................................................................................................

vi) அ) மானியத்திற்கு முன்னும், ஆ) மானியத்திற்கு பின்பும் நுகர்வோர் மிகையைக் காண்க.

.....................................................................................................

.....................................................................................................

vii) அ) மானியத்திற்கு முன்னும், ஆ) மானியத்திற்கு பின்பும் உற்பத்தியாளர் மிகையைக் காண்க.

.....................................................................................................

.....................................................................................................

viii) மானியத்தினால் ஏற்பட்ட தேறிய சமூக நலன் இழப்பு எவ்வளவு?

.....................................................................................................

.....................................................................................................


# 7. கட்டுப்பாட்டு விலைகள்

**A உச்ச விற்பனை விலை / உயர்ந்தபட்ச கட்டுப்பாட்டு விலை**

- குறிப்பிட்ட பண்டமொன்றின் ஆகக்கூடிய விற்பனை விலையை சட்ட ரீதியாக அரசாங்கம் நிர்ணயித்தல் உச்ச விற்பனை விலை எனப்படும்.

  Eg : அரிசி, பால்மா, சீனி, பாண், போன்ற பண்டங்களுக்கு அரசு நிர்ணயிக்கும் விலை

- உச்ச விற்பனை விலை அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமாயின் சமநிலை விலைக்கு கீழாக இருக்கவேண்டும்.




**i.** உச்ச விற்பனையில் சந்தையில் காணப்படும் மிகைக்கேள்வி எவ்வளவு?

.............................................................................................................

**ii.** மிகைக்கேள்வி காரணமாக கள்ளச்சந்தை தோற்றம் பெற்றதன்பின்

அ) நுகர்வோர் மிகை எவ்வளவு? ஆ) உற்பத்தியாளர் மிகை எவ்வளவு?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

**iii.** கள்ளச்சந்தை நடவடிக்கையினால் ஏற்பட்ட சமூக இழப்பு எவ்வளவு?

.............................................................................................................

iv. உச்ச விற்பனை விலையை செயற்றிறன் உடையதாக்குவதற்கு அரசு இறக்குமதியை மேற்கொள்வதாகக் கருதுக. அந் நடவடிக்கைகளின் பின் அ) நுகர்வோர் மிகை, ஆ) உற்பத்தியாளர் மிகையைக் காண்க.

..............................................................................................................................

..............................................................................................................................


..............................................................................................................................

## B தள விலை / இழிவளவான விலை

- குறிப்பிட்ட பண்டத்தின் சந்தைவிலை விற்பனையாளருக்கு பாதகமாக இருக்கும்போது அரசாங்கம் விற்பனையாளருக்கு சாதகமாக நிர்ணயிக்கின்ற விலையை தளவிலை என்பர். இவ்விலை சமநிலை விலைக்கு மேலாக அமைந்திருக்க வேண்டும்.

  Eg : விவசாயப் பொருட்களுக்குரிய தளவிலை

  குறைந்தபட்ச சம்பள நிர்ணயம்




i. தளவிலையில் காணப்படும் மிகைநிரம்பல் எவ்வளவு?

..............................................................................................................................

ii. மிகைநிரம்பல் நீங்குவதற்காக அரசு கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கருதுக. அந் நடவடிக்கையின் பின்,

அ) நுகர்வோர் மிகை

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

ஆ) உற்பத்தியாளன் மிகை எவ்வளவு?

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................

iii. மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்ததனால் அரசுக்கு ஏற்பட்ட செலவையும், சமூகநல இழப்பையும் காண்க.

.......................................................................................................................

.......................................................................................................................

.......................................................................................................................


## உத்தரவாத விலை

❖ விவசாய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் தான் எவ்விலையில் விவசாயப் பொருளைக் கொள்வனவு செய்வேன் என்பதனை வெளிப்படுத்தும் விலையை உத்தரவாத விலை என்பர்.

- இது கட்டுப்பாட்டு விலை அல்ல
- உத்தரவாதவிலை உற்பத்தியாளர்களுக்கு நன்மையளிக்க வேண்டுமாயின் சமநிலை விலைக்கு மேலாக இருத்தல் வேண்டும்.
- உத்தரவாத விலையில் தோன்றும் மிகை நிரம்பலை நீக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

1. மிகைநிரம்பலை கொள்வனவு செய்தல்.
2. குறைநிரப்புக் கொடுப்பனவை வழங்குதல்.

**நீங்கள் ஒரு வாய்ப்பை தவறவிட்டால்**
**உங்கள் விழிகளைக் கண்ணீரால் நிரப்பாதீர்கள்**
**உங்கள் கண்ணீர்,**
**உங்கள் முன்னுள்ள இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும்.**
**அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்**




Qd = 600 - 10P

Qs = 10P

i. உத்தரவாதவிலை ரூ. 50 ஆக காணப்படும் போது சந்தையில் காணப்படும் மிகைநிரம்பல் எவ்வளவு?

...........................................................................................................................

ii. உத்தரவாதவிலையில் மிகைநிரம்பலை அரசு கொள்வனவு செய்ததன் பின்

அ) நுகர்வோர் மிகை ..............................................................................

ஆ) உற்பத்தியாளன் மிகை .....................................................................

இ) சமூக இழப்பு ...................................................................................

என்பவற்றைக் காண்க.

iii. உத்தரவாதவிலையில் காணப்பட்ட மிகைநிரம்பலை நீக்குவதற்காக குறைநிரப்புக் கொடுப்பனவு வழங்கப்படுவதாகக் கருதுக.

அ) நுகர்வோர் மிகை ..............................................................................

ஆ) உற்பத்தியாளன் மிகை .....................................................................

இ) அரசின் செலவு ..................................................................................

ஈ) சமூக இழப்பு ...................................................................................

என்பவற்றைக் காண்க.

Q1.

01. தனியார் கேள்வி மற்றும் சந்தைக் கேள்வி என்பவற்றை வேறுபடுத்துக?

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

(04 புள்ளிகள்)

02. கைத்தொழிற் பண்டமொன்றின் நிரம்பல் மாற்றத்தினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(04 புள்ளிகள்)

03. பண்டமொன்றின் விலை அதிகரித்த போது அப்பண்டத்தின் மீதான நுகர்வோன் செலவு வீழ்ச்சியடைந்து இந் நிகழ்வினை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(04 புள்ளிகள்)

04. கேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டத்திற்கு அரசு வரிவிதிக்கும்போது வரிச்சுமையின் பெரும்பகுதியினை யார் தாங்குவார்? பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(04 புள்ளிகள்)

05. உச்ச விலைக்கட்டுப்பாட்டினால் சந்தையில் தோன்றும் விளைவுகளை சுருக்கமாக விளக்குக?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(04 புள்ளிகள்)

Q2.

01. விலைசார் கேள்வி நெகிழ்ச்சி என்றால் என்ன? அதனை தீர்மானிக்கும் இரண்டு காரணிகளை தருக?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

(04 புள்ளிகள்)

02. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான கேள்வி அதிகரித்த போதிலும் அதன் சந்தை விலை வீழ்ச்சியடைந்தது. இந்நிகழ்வின் பொருத்தப்பாட்டினை வரைபடத்தின் மூலம் விளக்குக?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(04 புள்ளிகள்)

03. உற்பத்தியாளன் மிகை என்றால் என்ன? அம்மிகை பூச்சியமாகக் காணப்படுவதற்குரிய நிபந்தனை யாது?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(04 புள்ளிகள்)

04. விவசாயப் பண்டமொன்றின் நிரம்பல் வீழ்ச்சியடைந்தபோது அதன் விலை பெரியளவால் அதிகரித்தது. இந் நிகழ்வினை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(04 புள்ளிகள்)

05. அரசாங்கம் தள விலையை நிர்ணயித்து அதிலுள்ள மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதாகக் கருதுக. இதன் விளைவுகளை சுருக்கமாகத் தருக?

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

(04 புள்ளிகள்)

## M.C.Q

01. பண்டமொன்றின் கேள்விக்கோட்டினை வரையும்போது எது மாற்றமடையும்?

1. நுகர்வோன் வருமானம்
2. பதிலீட்டுப் பொருளின் விலை
3. நிரப்பு பொருளின் விலை
4. நுகர்வோன் சுவை
5. கருத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை

02. ஒரு சாதாரண பண்டத்திற்கான கேள்வி வளையியானது எப்பொழுது இடப்புறமாக நகரும்?

1. நுகர்வோரது வருமானங்கள் அதிகரிக்கும் பொழுது
2. அப்பண்டத்தின் விலை அதிகரிக்கும் பொழுது
3. நிரப்பு பண்டங்களின் விலைகள் அதிகரிக்கும் பொழுது
4. நிரப்புப் பண்டங்களின் மீதான விளம்பரச் செலவுகள் அதிகரிக்கும் பொழுது
5. அப்பண்டத்திற்கான தேர்வு அதிகரிக்கும் பொழுது.

03. உற்பத்திப் பொருளொன்றின் கேள்வி வளையியில் ஒரு வலப்புற நகர்வுக்கு ஏதுவாக அமையக் கூடியது?

1. கிட்டிய பதிலீடொன்றின் விலை வீழ்ச்சியாகும்.
2. கருதப்படும் பொருளின் விலையில் ஏற்படும் வீழ்ச்சியாகும்.
3. வருமான அதிகரிப்பாகும்.
4. நிரப்புப் பொருளொன்றின் விலை அதிகரிப்பாகும்.
5. உற்பத்திச் செலவு அதிகரிப்பாகும்.

04. நுகர்வோன் வருமானம் வீழ்ச்சியடைந்தபோது X பண்டத்தின் கேள்வி அதிகரித்து அதன் விலையும் அதிகரித்தது எனின் X பண்டம்.

1. அத்தியவசியப் பண்டமாகும்.
2. ஆடம்பரப் பண்டமாகும்
3. இழிவுப் பண்டமாகும்
4. சாதாரண பண்டமாகும்
5. இணைப்புப் பண்டமாகும்

05. பின்வருவனவற்றுள் எது பண்டமொன்றின் சந்தைக் கேள்வியை மட்டும் தீர்மானிக்கும் காரணியாகும்?

1. தொடர்புடைய பொருளின் விலை
2. நுகர்வோன் சுவை
3. விலைமாற்றம் தொடர்பான எதிர்பார்க்கை
4. நுகர்வோர் எண்ணிக்கை
5. கருத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை

06. பண்டமொன்றின் நிரம்பல் வளையியை வரையும்போது பின்வருவனவற்றுள் எது மாறாததாகக் கொள்ளப்படுவதில்லை.

1. உற்பத்திக் காரணிகளின் விலை
2. கையாளப்படும் தொழில்னுட்பம்
3. தொடர்புடைய பண்டத்தின் விலை
4. அரசாங்கக் கொள்கை
5. கவனத்திலெடுக்கப்படும் பண்டத்தின் விலை.

07. பண்டமொன்றின் நிரம்பல் வளையி மேல் நோக்கிய சரிவைக் கொண்டிருப்பதற்குரிய **பொருத்தமற்ற** காரணி எது?

1. உற்பத்தி செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்போது எல்லைச்செலவு அதிகரித்தல்.
2. விலை அதிகரிக்கும்போது விற்பனையாளர் பெறும் இலாபமும் அதிகரித்தல்.
3. உற்பத்தி செய்யப்படும் அலகுகள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது சராசரிச் செலவும் அதிகரித்தல்.
4. பண்டத்தின் உற்பத்தித் தொகையை அதிகரிக்கும்போது அமையச்செலவு அதிகரித்து செல்லுதல்.
5. குறுங்காலத்தில் குறைந்து செல்லும் விளைவு விதியின் தொழிற்பாட்டினால் வெளியீடு அதிகரிக்க எல்லைச்செலவு அதிகரித்தல்.

08. பின்வருவனவற்றில் பொருளொன்றின் நிரம்பல் வளையியை இடப்புறமாக நகர்த்துவது எது?

1. உற்பத்தி செலவில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
2. உற்பத்தி செலவில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
3. விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
4. விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
5. கேள்வியில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

09. சந்தை ஆய்வொன்று X, Y, Z ஆகிய பண்டங்கள் வருமான நெகிழ்ச்சியை காட்டுகின்றது.

X பண்டம் = 1.6
Y பண்டம் = -0.6
Z பண்டம் = 0.6

மேலுள்ள பண்டங்கள் தொடர்பான சரியான கூற்று

1. X உம் Y உம் சாதாரண பண்டமாகும்
2. X அத்தியவசியப் பண்டமாகவும் Z ஆடம்பரப் பண்டமாகவும் காணப்படும்.
3. X ஆடம்பரமாகவும் Y அத்தியவசியமாகவும் காணப்படும்.
4. X ஆடம்பரப் பண்டமாகவும் Y இழிவுப்பண்டமாகவும் காணப்படும்.
5. X உம் Z உம் ஆடம்பரப்பண்டமாகக் காணப்படும்.

10. X பண்டத்தின் சந்தை விலை ரூ 10 இலிருந்து ரூ 12 ஆக அதிகரித்தபோது அப்பண்டத்தின் கேள்விக்கான 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது எனின் X இன் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1. -0.5　2. -1.5　3. +1.5　4. -1.05　5. -0.55

11. X பண்டத்தின் விலை ரூபா 50 இலிருந்து 30 ஆகக் குறையும் பொழுது Y பண்டத்திற்கான கேள்வி 1000 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக அதிகரிக்கின்றது. X க்கும் Y க்கும் இடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1. 0.5　2. − 0.5　3. 2.0　4. − 2.0　5. 2.5

12. A என்ற பண்டம் விலை ரூ 50 ஆக இருந்த போது அப்பண்டத்தின் மீதான நுகர்வோர் செலவும் 5000 ரூபாவாகக் காணப்பட்டது. அதன் விலை 20 சதவீதத்தால் அதிகரித்தபோது அப்பண்டத்தின் மீதான நுகர்வோர் செலவும் 20 சதவீதத்தால் அதிகரித்ததாகக் கருதுக. இந்நிலையில் A பண்டத்தின் விலை ரூ 60 ஆக காணப்படும்போது கேள்வித்தொகை எவ்வளவாகக் காணப்படும்.

1. 50 அலகுகள்　2. 100 அலகுகள்　3. 1000 அலகுகள்
4. 150 அலகுகள்　5. 80 அலகுகள்

13. பொருளொன்றின் விலையிலேற்படும் ஒரு மாற்றம் மொத்த வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில்,

1. அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகும்.
2. அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சியற்றதாகும்.
3. விலைமாற்றத்தால் நுகர்வோர் பெருமளவிற்கு ஈர்க்கப்படமாட்டார்கள்.
4. அப்பொருளுக்கான கேள்வி அலகு நெகிழ்ச்சி கொண்டதாகும்.
5. அப்பொருளுக்கான கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாகும்.

14. குறிப்பிட்டவொரு பண்டத்தின் நிரம்பல் சமன்பாடு $Q_s = -30 + 5P$ ஆகும். இங்கு நிரம்பல் நெகிழ்ச்சியின் தன்மை பற்றிய சரியான கூற்றினைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிவு செய்க.


| | நிரம்பல் நெகிழ்ச்சி | விலை அதிகரிக்கும்போது நெகிழ்ச்சிக் குணகம் மாறும் விதம் |
|---|---|---|
| (1) | ஒன்றைவிடக் குறையும் | அதிகரிக்கும் |
| (2) | ஒன்றைவிடக் குறையும் | வீழ்ச்சியடையும் |
| (3) | ஒன்றைவிடக் கூடும் | வீழ்ச்சியடையும் |
| (4) | ஒன்றைவிடக் கூடும் | அதிகரிக்கும் |
| (5) | அலகு நெகிழ்ச்சி | மாற்றமில்லை |

15. நுகர்வோனின் வருமானம் அதிகரித்த அதேவேளை, உற்பத்திச் செலவும் அதிகரித்தது எனின் A பண்டத்தின் சந்தை விலையிலும் தொகையிலும் யாது நிகழும்.

| | விலை | தொகை |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | மாறாது | அதிகரிக்கும் |
| 3. | அதிகரிக்கும் | நிச்சயமற்றது. |
| 4. | நிச்சயமற்றது. | நிச்சயமற்றது. |
| 5. | அதிகரிக்கும் | குறையும் |

16. பின்வரும் வரைபடம் பண்டமொன்றின் விற்பனைத் தொகைக்கும் விற்பனையாளருக்குக் கிடைக்கும் வருமானத்திற்கும் இடையிலான தொடர்பை காட்டுகின்றது. இப்பண்டத்தின் கேள்வி நிகழ்ச்சி என்னவாக இருக்கும்?

1. கேள்வி நெகிழ்ச்சியுள்ளது.
2. கேள்வி நெகிழ்ச்சி அற்றது.
3. பூச்சிய கேள்வி நெகிழ்ச்சி
4. அலகு கேள்வி நெகிழ்ச்சி
5. பூரண கேள்வி நெகிழ்ச்சியுள்ளது.




17. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான கேள்வி சார்பளவில் விலை நெகிழ்வுள்ளதாகக் கருதுக. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான நிரம்பலில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு பின்வருவனவற்றில் எதனை ஏற்படுத்தும்?

1. விலையில் ஒரு வீழ்ச்சி மற்றும் மொத்தவருவாயில் ஓர் அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.
2. விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி மற்றும் மொத்தவருவாயில் ஓர் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்.
3. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கு மிகை நிரம்பல் ஏற்படும்.
4. போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கு மிகைக் கேள்வி ஏற்படும்.
5. விலையில் சார்பளவில் சிறிய ஒரு வீழ்ச்சி ஏற்படுவதுடன் சமநிலைத் தொகை மாறாதிருக்கும்


18. குறிப்பிட்டதொரு சாதாரண பொருளின் கேள்வியானது விலையுடன் எதிர்க்கணியரீதியில் தொடர்புபட்டுள்ள அதேவேளை நிரம்பலானது விலையுடன் நேர்க்கணியரீதியில் தொடர்புபட்டு உள்ளது. தரப்பட்ட காலப் பகுதியொன்றில் 5000 அலகுகள் அலகொன்றிற்கு ரூ. 50 வீதம் விற்கப்பட்டன. பின்னர் வந்த ஒரு காலப்பகுதியில் 8000 அலகுகள் அலகொன்றிற்கு ரூ. 60 வீதம் விற்கப்பட்டன. பின்வருவனவற்றில் இம்மாற்றத்திற்குக் காரணமாக அமையத்தக்கது எது?

1. நிரப்புப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
2. பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
3. பொருளின்மீது விற்பனை வரியொன்று விதிக்கப்படல்.
4. உள்ளீடுகளின் உற்பத்தித் திறனில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
5. மூலப்பொருள் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

19. கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள் X பண்டத்தின் நிரம்பலிலேற்படும் ஒரு நகர்வு Y பண்டத்தின் கேள்வியில் எவ்வாறு நகர்வு ஏற்படுகின்றது என்பதைக் காட்டுகின்றன.



X பண்டத்தின் கேட்கப்படும் தொகையும் நிரம்பப்படும் தொகையும



Y பண்டத்தின் கேட்கப்படும் தொகையும் நிரம்பப்படும் தொகையும்


பின்வரும் சோடிகளுள் எது X, Y பண்டங்களை பெருமளவிற்குக் குறிப்பதாகவிருக்கும்?

1. தேயிலையும் கோப்பியும்
2. பஸ் பயணமும் ரயில் பயணமும்
3. அரிசியும் கோதுமை மாவும்
4. சீனியும் கருப்புப்பட்டியும்
5. டயர்களும் டியூப்புகளும்

20. கேள்வி வளையி $Q_d = 120 - 8P$ எனவும் சந்தைவிலை $P = 10$ எனவும் தரப்படுமாயின் நுகர்வோன் மிகை.

1. 15 ஆகும்
2. 100 ஆகும்
3. 112 ஆகும்
4. 120 ஆகும்
5. 400 ஆகும்

21. பண்டமொன்றின் உற்பத்தியின் மீது அரசாங்கம் ஒரு குறித்த நேரில் வரியை விதிக்கும் பொழுது, சந்தை நிரம்பல் வளையி SS இலிருந்து $S_1S_1$ க்கு நகருவதைப் பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது.




உற்பத்தியாளர் நுகர்வோர் மீதும் வரியினது தாக்கம் எவ்வளவாகவிருக்கும்?

1. நுகர்வோர் ரூபா 1200 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
2. நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
3. நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 1200 ஐயும் தாங்கிக் கொள்வர்.
4. நுகர்வோர் ரூபா 800 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 400 ஐயும் தாங்கிக் கொள்வர்.
5. நுகர்வோர் ரூபா 400 ஐயும் உற்பத்தியாளர் ரூபா 800 ஐயும் தாங்கிக் கொள்வர்.

22. எத்தகைய சூழ் நிலைகளில் நிறைபோட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் ஒரு பொருளின் விலை அப்பொருளின் மீது வரி விதிக்கப்பட்ட பின்னரும் மாறாதிருக்கும்.

| | கேள்வி நெகிழ்ச்சி | நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|
| 1. | ஒன்றைவிட பெரிது | ஒன்றை விட சிறிது |
| 2. | ஒன்றுக்கு சமன் | ஒன்றைவிட சிறியது |
| 3. | பூச்சியம் | முடிவிலி |
| 4. | முடிவிலி | பூச்சியம் |
| 5. | முடிவிலி | முடிவிலி |

23. சிகரட்டுகளின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் குறைவானதாக உள்ளதெனக் கருதுக. உற்பத்தி மீது கலால்வரி விதிக்கப்படுமாயின் அது பின்வருவனவற்றில் எவ்விதத்தில் விலை, தொகை மற்றும் சிகரட் மீதான நுகர்வோன் செலவு என்பதில் மாற்றத்தை ஏற்படுத்தும்?

| | விலை | தொகை | நுகர்வோரின் செலவீடு |
|---|---|---|---|
| 1. | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | குறையும் | குறையும் | குறையும் |
| 3. | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| 4. | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |


24. பின்வரும் தரவுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் X பண்டத்தின் சந்தைக் கேள்வி, நிரம்பல் பட்டியலைக் காட்டுகின்றன.

| தலா அலகு விலை (ரூ) | கட்கப்படும் தொகை (அலகுகள்) | நிரம்பல் செய்யப்படும் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 80 | 500 | 900 |
| 70 | 600 | 800 |
| 60 | 700 | 700 |
| 50 | 800 | 600 |
| 40 | 900 | 500 |

அரசாங்கம் இப்பொழுது X பண்டத்தின் உற்பத்தியாளருக்கு அலகொன்றிற்கு ரூ. 20 மானியத்தை அறிமுகம் செய்யுமாயின், புதிய சமநிலை விலை எதுவாகவிருக்கும்?

1. ரூ. 80  2. ரூ. 70  3. ரூ. 60  4. ரூ. 50  5. ரூ.40


25. பின்வரும் வரிப்படத்தில் காட்டியது போன்று இலங்கையில் பால் உற்பத்திக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு மானியத்தைப் பிரகடனம் செய்வதாகக் கருதுக.




பின்வருவனவற்றுள் எது அரசாங்கத்திற்கான மானியச் செலவைக் குறித்து நிற்கும்?


1. $P_2P_3MY$ 2. $OP_2YQ_2$ 3. $OP_1XQ_2$ 4. $OP_3MQ_2$ 5. $P_1P_3MX$

26. இங்கு தரப்பட்டுள்ள வரிப்படத்தில் சந்தைக் கேள்வியானது எல்லா விலைகளிலுமே நிரம்பலிலும் பார்க்கக் குறைவாக உள்ளது. சமூகம் OQ அலகுகளைக் கொள்வனவு செய்யவேண்டுமென அரசாங்கம் விரும்புமாயின்,





1. $OP_1$ இலும் பார்க்க விலை உயரக்கூடாதென விதிக்க வேண்டும்.
2. நிரம்பலாளர் $OP_4$ விலையை விதிக்க அனுமதிக்க வேண்டும்.
3. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_2P_3$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.
4. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_3$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.
5. விற்பனை செய்யப்படும் ஒரு அலகிற்கு $P_1P_4$ உற்பத்தி மானியம் அளிக்க வேண்டும்.

27. பின்வரும் வரைபடம் அரிசிக்கான கேள்வி, நிரம்பல் வளையிகளையும் E புள்ளியில் சந்தைச் சமநிலையையும் காட்டுகிறது. ஓரலகு அரிசிக்கு $P_1$ உயர்ந்தபட்ச விலையை விதிக்க அரசாங்கம் தீர்மானிப்பதாகக் கொள்க. உயர்ந்தபட்ச விலைகள் கொள்கையினால் ஏற்படக்கூடிய மிகச் சாத்தியமான விளைவு எது?



1. JK அளவினால் அரிசிக்கு மிகை நிரம்பல் காணப்படும்.
2. $OQ_2$ அளவினால் அரிசிக்கு பற்றாக்குறை நிலவும்.
3. அரிசிக்கான சமநிலை விலை $OP_2$ வுக்குக் கூடுதலாக அதிகரிக்கும்.
4. அரிசியின் விலை $OP_1$ இனை விடக் குறைவடையும்.
5. JK அளவினால் அரிசிக்கு மிகைக் கேள்வி நிலவும்.

28. விவசாயப் பொருளொன்றுக்கான சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகள் வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன. கிலோகிராம் ஒன்றிற்கு ரூ. 50 குறைந்தபட்ச விலையினை விதித்து அதனால் ஏற்படும் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன் மூலம் அவ்விலையினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் கருதுக. இத்தலையீட்டின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு?



1) 200 மில்லியன் ரூபாவாகும்
2) 240 மில்லியன் ரூபாவாகும்
3) 360 மில்லியன் ரூபாவாகும்
4) 400 மில்லியன் ரூபாவாகும்
5) 600 மில்லியன் ரூபாவாகும்.

29. செயற்திறன் வாய்ந்த தளவிலையொன்றை (Price Floor) உருவாக்கும்போது
1. நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் அதிகரிக்கும்.
2. நுகர்வோன் மிகை அதிகரிக்கும் உற்பத்தியாளன் மிகை குறையும்.
3. நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளன் மிகையும் குறையும்.
4. நுகர்வோன் மிகை குறையும் உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்.
5. நுகர்வோன் மிகை உற்பத்தியாளன் மிகை என்பன பாதிக்கப்படா.

30. "சாதாரண பொருளொன்றின்" விலை மற்றும் சந்தையில் அதன் விற்பனைத் தொகை இரண்டிலுமே ஏக காலத்தில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வாக அமைவது?

1. பொருளின்மீது விதிக்கப்பட்டிருந்த பயனுறுதிமிக்க உயர்ந்தபட்ச விலையானது நீக்கப்பட்டமை.
2. பொருளின் உற்பத்தியில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றம்.
3. பொருளின்மீது வரி விதிக்கப்படல்.
4. பொருள் உற்பத்தியாளர்களுக்கு மானியமொன்று வழங்கப்படல்.
5. குறித்த பொருளின் பதிலீடொன்றின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி.

***

**DCM** யாழ்.நகர்

தாயகம் டிஜிற்றல்